# தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமித்தல் - 2025
# (இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I )

## புள்ளி வழங்கல் திட்டம்

*ஆகக் கூடிய புள்ளிகள் 30*

1. **சேவை அனுபவம்**

(இ.க.நி.சே தரம் I இற்கு பதவி உயர்வு பெற்ற தினம் முதல் ஒரு வருடத்திற்கு வழங்கப்படும் புள்ளியானது அரசாங்க நிர்வாக சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இலக்கம் 01/2019 இன் பிரகாரம் தரம் I இல் ஆகக்கூடிய முனைப்புடன் கூடிய திருப்திகரமான சேவைக் காலத்துடன் கூடிய உத்தியோகத்தருக்கு சேவை அனுபவத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளும், ஏனைய உத்தியோகத்தர்களுக்கு சம விகித அடிப்படையில் தரம் I இல் முனைப்புடன் கூடிய திருப்திகரமான சேவைக் காலத்திற்கும் புள்ளிகள் உரித்தாகும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும். அத்துடன் ஒழுக்காற்று ரீதியில் தண்டனைக்குட்படல் அல்லது சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொண்தடன் அடிப்படையில் திருப்திகரமான சேவைக் காலத்தை இழந்த உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் அக் காலத்திற்குரிய புள்ளிகள் வழங்கப்படமாட்டாது)

**குறிப்பு: இ,க.நி.சேவை தரம் II இல் இரண்டு (02) வருடங்கள் முனைப்புடன் கூடிய திருப்திகரமான சேவைக் காலத்துடன் தரம் II மற்றும் தரம் III இல் 12 வருடங்களுக்கு அதிகமான முனைப்புடன் கூடிய திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த பின்னர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுள்ள உத்தியோகத்தர்களது, குறித்த முழுமையான 12 வருட சேவைக் காலம் மற்றும் தரம் II இல் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட மேலதிகமான முனைப்புடன் கூடிய திருப்திகரமான சேவைக் காலமானது தரம் I இற்குரிய சேவைக் காலமாக கருதப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்.**

*ஆகக் கூடிய புள்ளிகள் 20*

2. **பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான சேவை அனுபவம்**

2.1. **அதிபராக**

நியமனக் கடிதமானது சேவைப் பிரமாணக் குறிப்பின் படி நியமன அதிகாரியால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியால் (அமைச்சின்/ மாகாண பிரதம செயலாளர்/ மாகாணக் கல்விச் செயலாளர்) வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| a. | 1AB பாடசாலை ஒன்றில் நிரந்தர அதிபராக முழுமையான ஒரு வருடத்திற்கு | 03 |
| b. | 1C பாடசாலை ஒன்றில் நிரந்தர அதிபராக முழுமையான ஒரு வருடத்திற்கு | 02 |

2.2. **பிரதி அதிபராக**

| | | |
|---|---|---|
| a. | 1AB பாடசாலை ஒன்றில் பிரதி அதிபராக ஒரு முழுமையான வருடத்திற்கு | 02 |
| b. | 1C பாடசாலை ஒன்றில் பிரதி அதிபராக ஒரு முழுமையான வருடத்திற்கு | 01 |

2.3. **கல்வி அமைச்சில் அல்லது வலயக் கல்வி அலுவலகம் ஒன்றில் பாடசாலை மேற்பார்வை செயற்பாடுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர் ஒருவராக சேவை அனுபவம்**

| | | |
|---|---|---|
| a. | பணிப்பாளர் ஒருவராக சேவை அனுபவம் ஒரு முழுமையான வருடத்திற்கு | 02 |
| b. | கோட்ட/ உதவி/ பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவை அனுபவம் ஒரு முழுமையான வருடத்திற்கு | 01 |

**குறிப்பு 01 :** 12 மாத சேவைக் காலத்திற்கு மாத்திரம் ஒரு வருடத்திற்கான மொத்தப் புள்ளிகளும் உரித்தாகும் என்பதுடன், அதற்கு குறைவான காலத்திற்கு புள்ளி வழங்கப்படமாட்டாது. அதிபர் பதவியில் பதில் கடமை, கடமை நிறைவேற்றுதல் மற்றும் கடமை தழுவல் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அக் காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

***குறிப்பு 02 :*** மேலே *2.1, 2.2* இற்குரியதாக உரிய பாடசாலையானது நியமனம்/ இடமாற்றக் கடிதம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் பாடசாலை வகைப்படுத்தலுக்கமைய *1AB, 1C* பாடசாலையாக இருந்ததாகவும் குறித்த கடிதங்கள் உரிய நியமன/ அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கையொப்பமிடப்பட்டுள்ளது என்பதையும் எழுத்து மூலமாக உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் *2.3* இன் கீழ் கல்வி அமைச்சு அல்லது மாகாண அல்லது வலயக் கல்வி அலுவலகமொன்றில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் பாடசாலை மேற்பார்வைப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக/ ஈடுபடுவதாக எழுத்து மூலமாக பிரிவுக்குப் பொறுப்பான மேலதிக செயலாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ வலயக் கல்விப் பணிப்பாளர் எழுத்து மூலமாக உறுதிப்படுத்த வேண்டும்.

3. **மேலதிக கல்வித் தகைமைகள்** *ஆகக் கூடிய புள்ளிகள் 15*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்று அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் பெற்றுள்ள தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.

(ஆட்சேர்ப்பின் போது அல்லது வினைத்திறன் காண் தடைதாண்டலின் போது அல்லது பதவி உயர்வின் போது அடிப்படைத் தகைமையொன்றாக கருதப்பட்ட கல்வித் தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது)

3.1. கலாநிதி (PhD) - 15 புள்ளிகள்
3.2. தத்துவமானி (M Phil) - 13 புள்ளிகள்
3.3. பட்டப் பின் பட்டம் - 12 புள்ளிகள்
3.4. பட்டப் பின் டிப்ளோமா - 10 புள்ளிகள்
3.5. ஆரம்ப பட்டம் - 08 புள்ளிகள்
3.6. கல்வித் துறைக்கு/ ஆட்சேர்க்கப்பட்ட பாடத்துறைக்குரியதாக கற்றுள்ள டிப்ளோமா -06 புள்ளிகள்
3.7. வேறு டிப்ளோமாக்கள் - 03 புள்ளிகள்

(மேலே 3.6 மற்றும் 3.7இன் கீழ் புள்ளி வழங்கும் போது உரிய டிப்ளோமாவின் கற்கைக் காலம் ஆகக் குறைந்தது 450 மணித்தியாலங்கள் அல்லது 9 மாதங்களுக்கு மேற்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், உரிய டிப்ளோமா வழங்கும் நிறுவனமானது அரச அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டும் )

4. **ஆங்கில மொழித் தேர்ச்சி** *ஆகக் கூடிய புள்ளிகள் 05*
**(தொடர்பாடல் திறன் கருத்தில் கொள்ளப்படும்)**

5. **கணிணிசார் அறிவு** *ஆகக் கூடிய புள்ளிகள் 05*
**(பிரயோக பாவணை தொடர்பில் கருத்தில் கொள்ளப்படும்)**

6. **சேவைப் பாராட்டுக்கள்** *ஆகக் கூடிய புள்ளிகள் 03*

கல்விச் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவரால் பொது 230 பீ, பாராட்டுக்கள் மற்றும் குறைகூறல் படிவத்திற்கமைய முறையாக வழங்கப்பட்ட சேவை பாராட்டு ஒன்றிற்கு 1 புள்ளி வீதம் உச்ச பட்சம் 3 சேவைப் பாராட்டுக்களுக்கு

**குறிப்பு:** (திணைக்களத் தலைவர் எனப்படுபவர், மாகாணப் பிரதம செயலாளர், மாகாணக் கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகமாவார்)

7. **முன்வைப்பு** *ஆகக் கூடிய புள்ளிகள் 12*

கல்வித் துறையின் நவீன போக்குகள், நிகழ்கால கல்விக் கொள்கைகள் மற்றும் 21ம் நூற்றாண்டில் கல்வித் துறையின் சவால்கள் தொடர்பில் கவனம் செலுத்தி தேசிய பாடசாலை அதிபர் ஒருவர் என்ற வகையில் எதிர்காலத்தில் செயற்பட எதிர்பார்க்கும் விதம் தொடர்பில், தமது பிரயோக ரீதியான அனுபவத்துடன் தழுவியதாக 05 நிமிட வாய்மொழி மூலமான முன்வைப்பு ஒன்றை செய்ய வேண்டும் என்பதுடன், குறித்த முன்வைப்புக்குரிய வன் பிரதியும் நேர்முகப் பரீட்சை சபையினரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

7.1 பிரவேசம் மற்றும் அறிமுகம் - 02 புள்ளிகள்
7.2 உள்ளடக்கம் – (பாடசாலையை இனங்காணல், குறிக்கோள்கள், முன்மொழிவுகள்)-05 புள்ளிகள்
7.3 முன்வைப்புத் திறன் - 03 புள்ளிகள்
7.4 நேர முகாமைத்துவம் - 02 புள்ளிகள்

8. **சம்பவக் கற்கை** *ஆகக் கூடிய புள்ளிகள் 05*

(நேர்முகப் பரீட்சை சபையினால் முன்வைக்கப்படும் வாய் மொழி மூலமான சம்பவத்துடன் தழுவியதாக வினாக்கள் வினவப்படும் என்பதுடன், சம்பவப் பகுப்பாய்வு மற்றும் பிரச்சனைக்கு வழங்கப்படும் தீர்வு தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.)

9. **நேர்முக பரீட்சையின் போது வெளிக்காட்டும் ஒட்டு மொத்த திறமை மற்றும் ஆளுமை**

*ஆகக் கூடிய புள்ளிகள் 05*

**மொத்தப் புள்ளிகள்** 100